நகல் .-

தமிழ்நாடு அரசு
சுருக்கம்

நிலம் - அரசு நிலங்களில் குடியிருப்போர்க்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வருவாய் (நி.மு. 1(2)) துறை

அரசாணை (நிலை) எண். 168 நாள். 27.03.2000

படிக்க:-

அரசாணை (நிலை) எண். 75, வருவாய், நாள். 5.2.2000

ஆணை .-

அரசிற்குத் தேவைப்படாத புறம்போக்கு நிலங்களில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது பற்றி பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை செய்ய குழு ஒன்றினை அமைத்து மேலே படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அக்குழு தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளது. அரசு அக்குழுவின் பரிந்துரைகளை கவனமாக ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது:-

1) நீர்வழிப் புறம்போக்கு நிலங்கள், மேய்ச்சல், மந்தைவெளி, மயானம் மற்றும் பாட்டை என வகைபாடு செய்யப்பட்ட அரசு நிலங்கள் தற்போது அத்தகைய உபயோகத்தில் இல்லாமல் நத்தமாக உபயோகத்திலிருந்து அதில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகளைக் கட்டி குடியிருப்பவர்களுக்கு அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்கு தேவை இல்லை எனில், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றம் சம்பந்தப்பட்ட துறை அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு அந்த நிலங்களை புலத்தணிக்கை செய்து பின்னர் உள்ளாட்சி மன்றங்களில் தீர்மானங்களைப் பெற்று தகுதியின் அடிப்படையில் அத்தகைய குடியிருப்புகளை வரன்முறைப்படுத்தலாம்.

2) வீட்டுமனைப்பட்டா வழங்கும்போது இலவச மனைப்பட்டா பெறத் தகுதி இல்லாதவர்களுக்கு வழிகாட்டி பதிவின் (Guideline Register)-ன் அடிப்படையில் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தகுதியுள்ளவர்களுக்கு வீட்டுனைப்பட்டா வழங்கும் நேர்களில், தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளின்படி அனுமதிக்கப்பட்ட பரப்பை விட கூடுதலாக அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அக்கூடுதலான அவ்வாக்கிரமிப்புப் பகுதிக்கு வழிகாட்டிப் பதிவின்படி மதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

3) சென்னை புறநகர்ப்பகுதி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட தடையாணை இவ்வாறு வீட்டுமனைப்பட்டா வழங்கும் நேர்வுகளில் தளர்த்தப்படும்.

4) வீட்டுமனைப்பட்டா வழங்குவது பற்றிய மற்றைய விதிகள் / ஆணைகள் இவ்வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டத்திற்கு பொருந்தும்.

5) இவ்வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் (One Time Scheme) மட்டுமே செயல்படுத்தப் படும் திட்டமாகும்.

// ஆளுநரின் ஆணைப்படி //

ஒம்/- தேவேந்திரநாத் சாரங்கி,
அரசு செயலர்.

// உண்மைநகல் //

Verified RealEstate